பக்கங்கள் நான்கு — விலை ரூபா 4.50

# முரசொலி

முரசு 05 ஒலி 78 பிரமோதூத் தை 31
1991 பெப்ருவரி 13 ஆம் திகதி புதன்கிழமை


### பாராளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி எம். பி. கேள்வி

## யாழ்ப்பாணத்துக்கு அச்சுத்தாள் அனுப்ப உயர் அதிகாரி அனுமதி வழங்கினார்?

யாழ்ப்பாணத்திற்கு செய்தி அச்சுத்தாள் தேவை என இரு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஆனால் கூட்டுப்படைத் தலைமையகம் அதற்கு அனுமதியளிக்கவில்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர் புறக்கோட்டை மூலவி அச்சகம் அந்த இரு கோரிக்கையாளரில் ஒன்று என்றும் சொன்னார். அரச உயர் அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு செய்தி அச்சுத் —04 ஆம் பக்கம் பார்க்க

# நொச்சிமோட்டை பகுதியில் கடும் மோதல்

# இராணுவம் தாண்டிக்குளம் திரும்பியது

## மூன்றாம் நாளாக சண்டை தொடர்கிறது

**தாண்டிக்குளம் பகுதியில் இருந்து நொச்சிமோட்டைப்பகுதிக்கு வரமுயன்ற இராணுவம் மீது புலிகள் தொடுத்த கடும் தாக்குதலையடுத்து இராணுவம் தாண்டிக்குளத்திற்கு பின்வாங்கிச்சென்றது.**

வவுனியா புதுக்குளம் பகுதிக்கும் நொச்சிமோட்டைப் பகுதிக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் பத்து இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். நாள்முழுவதும் இப்பகுதியில் கடும் மோதல் இரு பகுதியினருக்கும் இடையில் நடைபெற்றது.

புலிகளின் எதிர்ப்பு இப்பகுதியில் கடுமையானதை தொடர்ந்து எஞ்சிய ராணுவத்தினர் சாஸ்திரி கூழாங்குளம் மரக்காலம்பலை வழியாக மீண்டும் தாண்டிக்குளத்திற்கு பின்வாங்கிச்சென்றனர்

தாண்டிக்குளம் பகுதியில் மூன்றாவது நாளாகவும் இராணுவத்தினர் முன்னேற முடியாது தரித்து நிற்கின்றனர்.

மோதல்களில் இராணுவத்தி —04 ஆம் பக்கம் பார்க்க

## ஆட்டுப்பாலத்தில் கண்ணிவெடி கவச வாகனம் முற்றாகச் சேதம்

திருமலை மாவட்டம் புல்மோட்டை ராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை ராணுவத்தினர் கவசவாகனம் சகிதம் வெளியேறினர்.

இவர்கள் மீது ஆட்டுப்பாலம் எனும் பகுதியில் விடுதலைப்புலிகள் கண்ணிவெடித்தாக்குதல் நடாத்தினர். இதனால் கவச வாகனம் சிதறியது இதில் பயணம் செய்த ராணுவத்தினர் அனைவரும் பலியாகியிருக்கலாம் எனக்கருதப்படுகிறது. (71)

## முல்லைத்தீவிலும் கடும் சண்டை விமானங்களும பீரங்கிப்படகுகளும் தாக்கு

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து பல பகுதிகளாலும் வெளியேற முயற்சிக்கும் இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

நேற்று ஆரம்பித்த இம் மோதலில் இராணுவத்தினருக்கு உதவியாக விமானங்களும், பீரங்கிப் படகுகளும் தாக்குதல் நடாத்தி வருகின்றன. மோதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## வளலாய் நோக்கி பலாலியிலிருந்து நாள் முழுவதும் ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை எட்டு மணி முதல் மாலை வரை தொடர்ந்து வளலாய் நோக்கிஷெல்தாக்குதல் நடாத்தப்பட்டது

ஷெல்கள் வளலாய் பக்கமாக வீழ்ந்து வெடித்தன. சுமார் ஆறு மணி நேரமாக நடைபெற்ற ஷெல் தாக்குதலில் முப்பது ஷெல்கள் வளலாய் பகுதியில் வீழ்ந்தன இதனால் பல வீடுகள் சேதமடைந்தன. வீரகத்தி கருணாகரன் (28) என்பவர் பலியானார். (71)

## தாண்டிக்குளத்தில் தொடர்ந்து வான்தாக்கு

நேற்று மூன்றாவது தினமாக நடைபெற்றுக் கொண்டிருந்த தாக்குதல் நடவடிக்கையினால் நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தும் பலர் இறந்தும் உள்ளதாக அஞ்சப்படுகின்றது. நொச்சிமோட்டை, தாண்டிக்குளம், பறநாட்டான்கல் ஆகிய பகுதிகளில் தொடர்ந்தும் விமானத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அப்பகுதியிலேயே காயமடைந்தவர்கள் தங்கியுள்ளதால் வரமுடியாது தவிப்பதாக அங்கிருந்து வந்த சிலர் தெரிவித்துள்ளனர். (ப- 14)

### தி. மு. க. தலைவர் கருணாநிதி

## ஈழத்தமிழர்இன்னல் குறித்து தமிழக மக்கள் கவலைப்படுவதை தடுக்க முடியாது

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அஸாம் உல்பா தீவிரவாதிகளுக்கும் இடையில் எந்தவிதமான தொடர்பும் இல்லை என தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடையே பேசிய கருணாநிதி புலிகளுக்கும் உல்பாவுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக சென்னை வந்த மத்திய உள்விவகார அமைச்சர் சுபோத்கான் சஹாய் கூறி

—04 ஆம் பக்கம் பார்க்க

## பேக்கரிகளுக்கு எதிராக நடவடிக்கை

350 கிராமுக்கும் குறைவான தரமற்ற பாண் தயாரிக்கும் பேக்கரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ் மாவட்ட பேக்கரி சங்கம் அறிவித்துள்ளது.

## இனப்பிரச்சினை தீர்வுக்கு சு. க. எம். பி. ஆலோசனை

''நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் சிங்களவர் தமிழும், தமிழர் சிங்களமும் பேசவேண்டும்'' இவ்வாறு அனுராதபுரம் மாவட்ட சு. க. எம். பி. கே. பி ரத்நாயக்கா பாராளுமன்றத்தில் கூறினார்.

சிங்கள மாணவர்களுக்கு க. பொ. த மட்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பயணிகள் வவுனியாவில் தவறவிட்ட பொருள்கள்

வவுனியாவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கு நின்ற பயணிகள் தமது பொதிகள், இதர பொருள்களை தவறவிட்டுள்ளனர்.

இப் பொருள்களை மீளப்பெறு உரிமையாளர்

...04 ஆம் பக்கம் பார்க்க

## பொலநறுவைகிராமவாசிகளுக்கு ஆயுதங்கள் தருமாறுகோரிக்கை

பொலநறுவைப்பகுதியில் சிங்களக்கிராமம் ஒன்று தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி கிராம வாசிகளுக்கு துப்பாக்கிகள் தேவைப்படுவதாக பொலநறுவை எம். பி எஸ். ஜே. பி நெல்சன் பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளார். இப்பகுதியில் பத்து வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதும் நான்கு சிங்களவர் பலியானதும் தெரிந்ததே.

## திருமலை அகதிகள் பட்டினியால் வாடுகிறார்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள திருமலை அகதிகளும் பொது மக்களும் சீரற்ற உணவு நிலையால் பல நாள்களாக பட்டினியால் வாடுகின்றனர்.

வவுனியா உணவுக் களஞ்சியத்தில் உணவுப் பொருள்கள் போதியளவு இருக்கின்றபோதிலும் வவுனியாவில் இராணுவத்தினரின் கெடுபிடியால் பொருள்களை எடுத்துவர முடியாதிருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (38)

## வளர்ப்புநாய்களுக்கு விசர்தடுப்பூசி

உடுவில் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட ஏ. ஆர் வி. எனப்படும் தடுப்பூசி மருந்து வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக உடுவில் பொது சுகாதாரப் பரிசோதகர் கு. சிவபாலராஜா தெரிவித்துள்ளார்.

இந் நாட்களில் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது அனைத்து மக்களும் தங்கள் வீட்டிலுள்ள நாய்களைக் கொண்டு சென்று மேற்படி மருந்தினைப் பெறுவதால் விசர் நாய்க் கடியிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்க முடியுமென அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்

மார்ச் 4 ஆம் திகதி தாவடிப் பகுதியிலும், 5 ஆம் திகதி இணுவில் பகுதியிலும், 6 ஆம் திகதி உடுவில் பகுதியிலும், 7 ஆம் திகதி சங்குவேலிப்பகுதியிலும் உள்ள குறிப்பிட்ட சில நிலையங்களில் வைத்து இத்தடை மருந்து ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு உதவி

வறுமையில் வாடும் கோண்டாவில் கிழக்கு விவசாயிகளுக்கு அதிகளவு புனர்வாழ்வுக் கழகம் உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளது

புகையிலை, வெங்காயம் தவிர்ந்த உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள் தங்களது விவசாய அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் தங்களின் விபரங்களை கோண்டாவில் கிழக்கு சனசமூக நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

இடம் பெயர்ந்து இப்பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோரும் தமது பெயரினை பதிவு செய்து கொள்ளலாம் எனவும் இதற்கான விண்ணப்பப் படிவங்கள் மேற்படி சனசமூக நிலையத்தில் விநியோகிக்கப்படுகின்றது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-10)

## ஆரம்பசுகாதார பராமரிப்புச்சேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் பிரிவு புதிதாக ஆரம்ப சுகாதார பராமரிப்புச் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆரம்ப சுகாதார பராமரிப்புச் சேவை உதவி அரச அதிபர் பிரிவுதோறும் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது.

சுயதொழில் முயற்சி, ஊக்குவிப்பு, திட்டமிடல், சுகாதாரம் பேணுதல், கிராமிய மூல வளங்களைப் பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் இந்த ஆரம்ப சுகாதார பராமரிப் புச் சேவையினூடாக மேற்கொள்ளப்படவுள்ளன. (33)

## சட்டத்தில் மட்டும்தான் 'தமிழ்'

தமிழ் அரசகரும மொழி என்பது உண்மைதான். என்றாலும் பொலிஸ் நிலையங்களில் தரப்படும் புகார்களை தமிழில் பதிய முடியாது.

இவ்வாறு கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொலிஸ் — ஆலயம் — பாடசாலை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாணவர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த சிரேஷ்ட பொலிஸ் அதிபர்கள் சமரசேகர, நிஸாம் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (ப-1)

## ச. ச. நிலைய சம்மேளனக்கூட்டம்

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளத்தின் கூட்டம் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள சம்மேளனக் காரியாலயத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் நூலகர் பயிற்சிக்கான கருத்தரங்கு பற்றிய விடயமும் நிலையங்களில் நூலகங்கள் அமைத்தல் பற்றியும் ஆராயப்படும் எனவும் நூலகர் என். செல்வராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ★ கடற்றொழில் அமைச்சு திருமலைக்கு மாற்றம்: சிங்கள மீனவரைப் பலிக்கடாவாக்கும் செயல் என

# நீர்கொழும்பு, சிலாபம் மீனவர் பலத்த கண்டனம்!

கடற்றொழில் அமைச்சைத் திருமலைக்கு மாற்றியதன் மூலம் அரசு சிங்கள மீனவரை பலிக்கடாவாக்க முனைவதாகச் சிலாபம் கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு பிராங் மாரிக்கஸ் பெர்ணாண்டோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளைச் சேர்ந்த பல பிரஜைகள் குழுக்களும் இது தொடர்பாக அரசுக்குக் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

சட்டம், சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள திருமலைக்கு மேற்படி அமைச்சை இடம் மாற்றி சிங்கள மீனவரை அங்கு அழைப்பது உலகத்தை முட்டாளாக்கும் ஒரு நடவடிக்கையெனவும் இதன் மூலம் அப்பாவிச் சிங்கள மீனவரை அரசு பலிக்கடாவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் இப் பிரஜைகள் குழுக்கள் தெரிவித்துள்ளன.

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் அதன் உப தலைவர்களில் ஒருவரான ஏ செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் சங்க முன்னைநாள் தலைவர் அமரர் ஈ.கே.குமரையாவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின் வருவோர் ஏக மனதாக போட்டி எதுவும் இன்றி தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் கே.ஜதுகுலசிங்க, செயலாளர் ஏ தேவராசா, தன அதிகாரி கப்டின் டீ ஏ எம் குணசிங்கம். இன்னும் 5 உப தலைவர்களும் 6 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். கே.சபாநாதன் கௌரவ கணக்குப் பரிசோதகராகத் தெரிவு செய்யப்பட்டார். (16)

## இடம்பெயர்ந்த மாணவருக்கு உதவி

மல்லாகம் மயிலணி மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கும் இடம் பெயர்ந்த குரும்பசிட்டி பொன்.பரமானந்த மகா வித்தியாலய மாணவர்களுக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபை பல பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அதிபர் வி.தளையசிங்கம் தலைமையில் நடந்த இந் நிகழ்ச்சியில் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்து அன்பளிப்பு உபகரணங்களை இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வழங்கினார் தெல்லிப்பளை கொத்தணி அதிபர் எஸ்.கந்தசாமி சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டார். (ப-10)

## ஹெரோயின் கடத்தலில் பௌத்த பிக்கு! இவருக்குஉதவிய தமிழ் இளைஞரும் கைது!

கொழும்பிலுள்ள பிரபல பௌத்த விகாரையொன்றைச் சேர்ந்த பௌத்த மதகுரு ஒருவரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலுள்ள போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்தி வரும்போதே இவர் கைது செய்யப்பட்டார்.

இந்தியாவில் அம்பேத்கார் பௌத்த விகாரை யொன்றில் இருந்து கொண்டு அந் நாட்டின் போதைப் பொருள் கடத்தல் பிரபல புள்ளிகளுடன் இணைந்து இந்த பிக்கு சர்வதேச 'வியாபார'த்தில் பங்கு கொண்டுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல தடவைகள் இந்த கடத்தலை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ள இந்த பிக்குவுக்கு உடந்தையாக செயற்பட்ட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவரும், கிராண்பாசைச் சேர்ந்த பெண்மணி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## திருமலையிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்

## வடபகுதியில் கடமை புரியத் தடை!

திருமலையில் கடமை புரிந்து வன்செயலை அடுத்து தற்போது வடக்கிற்கு இடம் பெயர்ந்துள்ள அனைத்து பாடசாலை ஆசிரியர்களும், கல்வித்திணைக்கள ஊழியர்களும் உடன் திருமலைக்கு கடமைக்குத் திரும்ப வேண்டும் என பணிக்கப் பட்டுள்ளது.

இது பற்றி வட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் யாழ்-கல்விப் பணிப்பாளருக்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக் கடிதத்தில் திருமலையில் இருந்து இடம் பெயர்ந்த கல்வித் திணைக்கள ஊழியர்கள் எவரும் யாழ் மாவட்டத்தில் மேற்கொண்டும் ஒப்பமிடவோ அல்லது தற்காலிக கடமை புரியவோ அனுமதிக்க வேண்டாமெனவும் அவர்களை திருமலைக்கு உடன் திரும்புமாறு அறிவுறுத்தும் படியும் கேட்கப்பட்டுள்ளது. (ப-17)

LIONS CLUB OF VADDUKODDAI

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

மேற்படி சீட்டிழுப்பு 17 - 02 - 1991 ஞாயிறு காலை 10.00 மணிக்கு சித்தன்கேணியில் உள்ள லயன்ஸ் மண்டபத்தில் நடைபெறும் பரிசு சீட்டுக்கள் வாங்கியோர் இந் நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர்.

துரைசிங்கம் ரகு
தலைவர்

02066

# இலங்கைக்கான வருடாந்த நிதி உதவியை

# படிப்படியாகக் குறைக்கப் பின்லாந்து முடிவு!

பின்லாந்து அரசு இலங்கைக்கான நிதி உதவியை அடுத்துவரும் ஆண்டுகளில் கணிசமான அளவு குறைக்கப்போவதாக அறிவித்துள்ளது.

1980 ஆம் ஆண்டு 40 மில்லியனாக இருந்த இலங்கைக்கான பின்லாந்தின் நிதி உதவி 1987 ஆம் ஆண்டு 550 மில்லியனாக அதிகரிக்கப்பட்டிருந்தது.

ஆனால் எதிர்வரும் 1992 ஆம் ஆண்டுக்கான நிதியுதவியை 300 மில்லியனாகவும் 1993 ஆம் ஆண்டுக்கான நிதியுதவியை 250 மில்லியனாகவும் 1994 ஆம் ஆண்டுக்கான நிதியுதவியை 100 மில்லியனாகவும் படிப்படியாகக் குறைக்கப் போவதாக பின்லாந்து சர்வதேச உதவி நிறுவனத்தின் மேலதிகப் பணிப்பாளரும், பின்லாந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் அறிவித்துள்ளனர்.

எனினும் பின்லாந்தின் உதவியுடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களைப் பூர்த்தியாக்கும் நோக்குடன் 1991 ஆம் நடப்பாண்டிற்கு மட்டும் 500 மில்லியனை வழங்க பின்லாந்து அரசு இணங்கியுள்ளது.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும், தென் பகுதியிலும் ஏற்பட்டுள்ள குழப்பநிலையைக் கருத்தில் கொண்டே இலங்கைக்கான உதவியை படிப்படியாகக் குறைக்க பின்லாந்து முடிவெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புகையிலைச்செடியில் புதுவித நோய்

வலிகாமம் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள புகையிலைகளுக்கு ஒரு புதுவித இலைச் சுருட்டி நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் புகையிலை உற்பத்தி பெரும் பாதிப்பினை அடையும் எனத் தெரிகிறது.

இணுவில், உடுவில், மானிப்பாய், மருதனார்மடம், கோப்பாய் பகுதியில் தற்போது தோட்டங்களில் வளர்ந்துள்ள புகையிலைச் செடிகளில் இந்நோயினை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. புகையிலைச் செடியின் இலைகள் சுருண்டு அவை நீண்டு வளர முடியாத நிலையில் உள்ளன.

இது தொடர்பாக அனுபவம் வாய்ந்த ஒரு விவசாயியை விசாரித்தபொழுது புகையிலைக் கன்றுகளுக்கான நாற்றுமேடையினை சோழகக் காற்றுக் காலத்தில் அமைத்து வாடைக்காற்றுக் காலத்தில் நட்டதால் ஏற்பட்டிருக்கலாம் எனவும் இவ்வாறான நோய் முற்காலத்தில் ஏற்பட்டது கிடையாது எனவும் கூறினார்.

இதே சமயம் நாற்று நடும் போது காலம் தாழ்த்திப் பெய்தகடும் மழையும் போதிய பசளை யின்மையும் காரணமாய் இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

(ப-10)

## சகல உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களும்

## ஜூன் மாத இறுதிக்குள் நடைபெறும்

நாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஜூன் மாத இறுதிக்கு முன்னர் நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர நகர, பிரதேச சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் ஒரே நாளில் நடைபெறவுள்ளன.

இத் தேர்தலை நடாத்துவதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும் எனவும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை வரியிறுப்பாளர்களுக்கு அதிகப்படியான சேவையினை வழங்கும் பொருட்டு நடப்பு வருடம் உள்ளூராட்சித்துறை ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## வடக்குக் கிழக்கில் 377 அகதி முகாம்கள்:

## யாழ் குடாவில் மட்டும் 159 நிலையங்கள்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் 377 அகதிமுகாம்கள் தற்பொழுது செயற்பட்டு வருவதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய புள்ளிவிபரங்கள் வருமாறு:

யாழ் குடாவில் 159 அகதி முகாம்கள் தற்போது செயற்பட்டு வருகின்றன. இவற்றில் 39,282 குடும்பங்கள் தங்கியுள்ளன.

முல்லைத்தீவில் 32 முகாம்களில் 55,925 பேரும், மன்னாரில் 46 முகாம்களில் 107,375 பேரும், கிளிநொச்சியில் 4 முகாம்களில் 1,431 பேரும், வவுனியாவில் 25 முகாம்களில் 20,195 பேரும் மட்டக்களப்பில் 52 முகாம்களில் 57,430 பேரும் அம்பாறையில் 27 முகாம்களில் 26 138 பேரும், திருமலையில் 32 முகாம்களில் 39, 234 பேரும் உள்ளனர்.

யாழ் கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களில் உறவினர்களின் வீடுகளில் உள்ளோர் இக்கணிப்பில் சேர்க்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

## தனியார் பாடசாலை ஆசிரியர் கூட்டம்

தென்மராட்சியில் உள்ள சகல தனியார் பாடசாலைகளினது உரிமையாளர்களையும், அதன் ஆசிரியர்களையும் இம்மாதம் 15 ஆம் திகதி பி.ப மூன்று மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சிக் கல்விப் பகுதி நிழல் நிர்வாகம் கேட்டுள்ளது.

(ப 5)

## 36 பால் சேகரிப்பு நிலையங்களை கிளி. கிராமங்களில் ஆரம்பிக்க முயற்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் 36 கிராமப்பகுதிகளில் பால் சேகரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கும் நடவடிக்கையைக் கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கிராமப்பகுதியில் உள்ள மக்களுக்கிடையே பால் சேகரிப்பினை விருத்தி செய்யவும், மேலும் பொருளாதார ஸ்திர நிலையைக் கொண்டுவரவும் இத் திட்டம் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமப்பகுதிகளில் இளைக்குழு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்து இவர்களுக்குக் கால்நடைகளின் வைத்தியத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுச் சித்தியடைந்தவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(ப-6)

## உடற்பயிற்சிமெய்வல்லுநர்போட்டி

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் உடற்பயிற்சிப் போட்டி, மெய்வல்லுநர்ப்போட்டி, உதைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட, வலைப்பந் தாட்டப் போட்டிகளை நடாத்த ஒழுங்குகளைச் செய்யுமாறு யாழ் மாவட்ட உடற்கல்வி அதிகாரி த. அருணகிரிராசா பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கோட்டக் கல்வி அதிகாரிகளினூடாகப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தில் உடற்பயிற்சிப் போட்டிகள் கோட்ட மட்டத்தில் மார்ச் மாதம் முதலாம் திகதியும், மாவட்ட இறுதிப்போட்டிகள் மார்ச் மாதம் 15 ஆம் திகதியும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 10 ஆம் திகதி மெய்வல்லுநர்ப் போட்டி கோட்ட மட்டத்திலும், ஜூன் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் மாவட்ட மெய்வல்லுநர்ப் போட்டியும் நடைபெறும்.

உதைப்பந்தாட்டம, கரப்பந்தாட்டம் (ஆண்), வலைப்பந்தாட்டப் போட்டிகள் கோட்ட மட்டத்தில் ஏப்ரல் 15 க்கு முன்னரும், மாவட்ட போட்டிகள் மே 25 க்கு முன்னரும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ப-17)

## மருத்துவப்பட்டதாரிகளுக்குபயிற்சி

சுகாதார அமைச்சு மருத்துவப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி வழங்கவுள்ளது.

இந்தப் பயிற்சியைப் பெற விரும்புவோர் மருத்துவ பீட பீடாதிபதிகள் அல்லது வட கொழும்பு மருத்துவ பீடத் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து அதற்கான விண்ணப்பத்தைப்பெற்று இம் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் மருத்துவப் பட்டப் படிப்பை மேற்கொண்டவர்களுக்கு விண்ணப்பப் படிவம் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இதுபற்றிய மேலதிக விபரங்களைச் சுகாதார அமைச்சின் மேலதிக பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நூலகம் மீண்டும் இடமாற்றம்

பொம்மர் தாக்குதல் காரணமாக பெரும் சேதத்துக்குள்ளான வேலணை நூலகம் வேலணை பிரதேசசபையில் இருந்து வேலணை கோட்டக்கல்வி அலுவலகத்தின் களஞ்சிய அறையில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

ஆனால் தற்போது வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் சில வகுப்புக்கள் வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தின் சில பகுதிகளில் இயங்கி வருவதனால் மேற்படி நூலகம் இங்கிருந்து இடம் மாற்றப்பட்டு, வேலணை வங்களாவடியில் உள்ள முருகன் கோயிலுக்கு அருகிலுள்ள தனியார் இல்லத்தில் இயங்கி வருவதாக இதன் நூலகர் தெரிவிக்கிறார்.

## தொலைக்கல்விவிசேடவகுப்புக்கள்

தொலைக்கல்வி மூலம் பயிற்சிபெறும் 1989 — 91 கல்வியாண்டிற்கான ஆசிரிய மாணவர்களுக்கான விசேட வகுப்புகள் இம்மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறும் என யாழ் மாவட்ட தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் ம. செ. அலெக்ஸாந்தர் அறிவித்துள்ளார்.

இதேவேளை 1989—91 கல்வியாண்டிற்கான மாணவர்களுக்கான பகுதி 1 பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் உடனடியாக அனுப்ப வேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்ட ஆசிரிய மாணவர்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் காலை 10 மணி முதல் பி ப 1.30 வரை வந்து தங்கள் விண்ணப்பபடிவங்களைப் பூர்த்தி செய்து தரவேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (ப 5)

## இஸ்ரேல் போரில் இறங்கலாம் -ஆரன்

## ஈரான் பார்த்துக்கொண்டிராது - வலியாத்தி

இஸ்ரேல் தொடர்ந்து அமைதியாக இருக்கும் என்பதை உறுதியாகக் கூறமுடியாது என இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் மோஷே ஆரன் எச்சரித்துள்ளார். அமெரிக்கா சென்றுள்ள ஆரன் அங்கு அமெரிக்க தலைவர்களையும் சந்தித்துள்ளார்.

வளைகுடாப் போரில் இஸ்ரேல் நேரடியாக பங்குபற்றினால் ஈரானும் போர்க்களத்தில் குதிக்கும் நிலை ஏற்படலாம் என ஈரானிய வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வலியாத்தி சுட்டிக்காட்டினார்.

### ஈராக்கின் ஸ்காட் தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு இஸ்ரேல் மீதும் சவுதி அரேபியா மீதும் ஈராக் ஸ்காட் ஏவுகணை தாக்குதலை நடாத்தியுள்ளது. இஸ்ரேலில் வீழ்ந்த ஸ்காட்டினால் 20 பேர் காயமடைந்தனர், பல வீடுகள் தரைமட்டமாகின. சவுதி தலைநகர் நோக்கிச் சென்ற ஸ்காட்டை அமெரிக்காவின் பற்றியட் ஏவுகணை வழிமறித்து தாக்கியபோதும் ஸ்காட்டின் முன்பகுதி தொடர்ந்து பறந்து ரியாட்டில் உள்ள முஸ்லிம் கலாசார பல்கலைக்கழகத்தின் மீது வீழ்ந்து வெடித்தது. கட்டிடம் சேதமடைந்தது. அங்கிருந்த இரு காவலர் காயமடைந்தனர். இத்தாக்குதல்கள் ஈராக்கின் நடமாடும் ஏவுதளங்களை தாம் அழித்துவிட்டதாக அமெரிக்க படைகள் கூறிய சிறிது நேரத்தில் நடாத்தப்பட்டது,

### தினமும் உறக்கம் கலையும் ஈராக்கியர்

ஈராக் மீது அமெரிக்க படைகள் நேற்று நடாத்திய குண்டு வீச்சில் குழந்தைகள் வைத்தியசாலை, மகப்பேறு வைத்தியசாலை என்பன சேதமடைந்துவிட்டதாக ஈராக் குற்றஞ் சாட்டியுள்ளது. தினமும் இரவில் ஈராக்கிய மக்கள் நான்கு அல்லது ஐந்து தடவை விழித்து பதுங்கு குழிக்கு ஓடவேண்டிய நிலை காணப்படுவதாக பக்தாத் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனிடையே பக்தாத்தில் மோசமான காலநிலை காணப்படுவதால் விமானத்தாக்குதல் நடாத்துவது கடினமாக உள்ள தாக அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### இஸ்ரேலிய உளவாளிககு மரணதண்டனை

ஜோர்தான் விமானப்படையில் ஊடுருவி உளவு பார்த்த ஓர் இஸ்ரேலிய விமானிக்கும் பிரஜை ஒருவருக்கும் ஜோர்தானில் மரண தண்டனை வழங்கப்பட்டது. இஸ்ரேலிய பெண்மொஸாட் உளவாளி ஒருவரினால் இவர்கள் இருவரும் உளவு பணிக்கு அமர்த்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஆலயங்களில் மகாசிவராத்திரி

புண்ணிய தினமான சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்றிரவு யாழ் மாவட்டத்திலுள்ள பிரசித்திபெற்ற சிவாலயங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் பூசைகள் வழிபாடுகள் மிகச்சிறப்பாக நடைபெற்றன.

யாழ் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவில், நல்லூர்ச் சிவன்கோவில், வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில், சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் கோவில், காரைநகர் ஈழத்துச் சிவன் கோவில் முதலான பிரபல்யம்வாய்ந்த சிவன் கோவில்களில் இத்தினம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது !12,33

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, 'லஷ்மீபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 13 - 02- 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஈழக்கோரிக்கை தமிழ் நாட்டிற்கும் பரவலாம் என தொண்டமான் எச்சரிக்கை

''இலங்கை இனப்பிரச்சினை உடனடியாக தீர்க்கப்படாவிட்டால் ஈழக்கோரிக்கை தமிழ் நாட்டிலும் பரவக்கூடும்'' என அமைச்சர் தொண்டமான் எச்சரித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றில், ''தமிழ் மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கிய இப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் தமிழ் நாட்டிலும் நிலைமைமோசமாகலாம் ஈழம் விஸ்தரிக்கப்பட்டு தமிழ் நாட்டையும் உள்ளடக்கியதாக அமையலாம் இதற்கு தி.மு. கவும் ஒத்துப்போகலாம்'' எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகள் பின்பு கிளிநொச்சியில் இருந்தோ அல்லது வேறு எந்தப்பகுதியில் இருந்தோ அரசுடன் போரிடமாட்டார்கள் தமிழ் நாட்டில் இருந்தே போரிடுவார்கள்.

இலங்கை அரசு சரியாக செயற்படாத காரணத்தினால் இப்படி ஒரு நிலை உருவாகியது எனக்கருத இடமளியாது அரசு உடனடியாக அரசியல் தீர்வுகாணவே முயற்சிக்க வேண்டும் எனவும் தொண்டமான் கேட்டுள்ளார்.

## கிராம உற்பத்தி இணைப்புக் கூட்டம்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமிய உற்பத்திக் குழுக்களின் இணைப்புக் கூட்டம் எதிர்வரும் 16-ம் திகதி சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு குருநகர் பாங்சால் வீதியில் உள்ள கார்மேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து உற்பத்திக் குழுக்களின் உறுப்பினர்களையும், இதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தர் தொண்டர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைத்துள்ளனர். (71

## வவுனியாவில் இருந்து மா எடுத்துவரக் கோரிக்கை

யாழ்ப்பாணம் பகுதியில் பாண் தயாரிக்க வவுனியாவில் இருந்து மா எடுத்துவர ஏற்பாடு செய்யுமாறு சில பாண் தயாரிப்பாளர் உணவுப்பகுதியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா களஞ்சியத்தில் இருந்து மாவைப்பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தால் தாம் அதனைப் பெற்றுவர முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (66)

## கப்பலில் செல்லும் நோயாளிகள் சமுகம் தர வேண்டுகோள்

கப்பலில் செல்லும் கடும் நோயாளிகள் எதிர்வரும் 14, 15-ம் திகதியன்று ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்யும் நோயாளிகள் காலை 10 மணிக்கு முன்னர் தேசிய அடையாள அட்டை, பெயர் போன்ற விவரங்களுடன் நேரில் வரவேண்டும்.

இதற்கு முன்னர் விண்ணப்பித்து கப்பலில் செல்ல இடம் கிடையாதோரும் பின்னர் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது .(ப-11)

## புதிய அதிபர்களின் பெயர்ப்பட்டியல் கல்வித்திணைக்களம் வந்துள்ளது?

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர்களாக மூன்று வருடங்கள் சேவை செய்த ஆசிரியர்கள் சேவையாற்றிய பாடசாலையின் தரத்திற்குரிய நிரந்தர அதிபராகவும், நிரந்தர அதிபர்களாகக் கடமையாற்றிய அதிபர்கள் அடுத்த தரத்திற்கும் நியமிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் ஒன்று கல்வி அமைச்சில் இருந்து யாழ் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது

இப்பட்டியலில் இடம்பெற்றிருக்கும் அதிபர்களுக்கு நியமனக் கடிதங்களை அனுப்பி வைப்பதற்காக யாழ் கல்வித் திணைக்களத்தினால் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். (12)

### ஈழத்தமிழர்...

யது தவறாகும். இதை ஏற்றுக்கொள்ளமுடியாதுஎன்றார்

நான் முதலமைச்சராக இருந்தபோது இத்தகைய தொடர்புகள் குறித்துமத்திய அரசு எந்தவிதமான தகவலும் எனக்குத் தரவில்லை. வன்முறையைக் கட்டுப்படுத்த மாநில அரசுக்கு மத்திய அரசு உதவி வழங்கியிருக்கலாமே எனவும் கருணாநிதி குறிப்பிட்டார்.

தமிழகம் குறித்து பொய்யான செய்திகளை மத்திய அரசின் வானொலியும், தொலைக்காட்சியும் வெளியிட்டு வருகின்றன. இதை நம்பத் தமிழக மக்கள் தயாராக இல்லை எனக் குறிப்பிட்ட கருணாநிதி, ஈழத்தமிழ் மக்களின் இன்னல் குறித்து தமிழ்நாட்டு மக்கள் கவலைப்படக்கூடாது எனக் கூற மத்திய அரசுக்கு எந்த உரிமையும் இல்லை என்றார்.

### நொச்சிமோட்டை...

ளரிடமிருந்து ரி-81 துப்பாக்கிகள் - 3, ரவை கூடுகள் - 4, ரி-56-II துப்பாக்கி, ரி-56-I துப்பாக்கி, ரவை கூடு-4, ஐ. எம். ரவை - 200 என்பன புலிகளால் மீட்கப்பட்டன.

இதேவேளை நேற்று முழுவதும் ஓமந்தைப்பகுதி எங்கும் ஹெலிகப்டர் ஒன்று கடும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. (71,ப-14)

### முல்லைத்தீவில்...

புலிகள் தரப்பில் நேற்று இரு போராளிகள் வீரமரணமடைந்தனர். (ப- 14, 71)

### யாழ்ப்பாணத்துக்கு...

தாள் அனுப்ப அனுமதி வழங்கியதாக சுதந்திரக்கட்சி எம். பி. ஒருவர் குற்றம் சாட்டிப் பேசியபோதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார். (ப-6)

### பயணிகள்...

கள் பூநகரி போக்குவரத்து பகுதி நேரக்காப்பாளரிடம் கையளித்து வருகின்றனர்.

இவைகளை தகுந்த அடையாளம். காட்டி பெற்றுக் கொள்ளுமாறு பூநகரி போக்குவரத்து பகுதி நேரக்காப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேபோல மூத்திரைச் சந்தி போக்குவரத்துப்பகுதியிலும் சில பொருள்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ப35,70)

### இனப்பிரச்சினை ..

டத்தில் தமிழ் மொழியும், தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியும் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

பிரதேச சபைகள் தத்துவம் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால் தற்போதைய சிக்கல் எழுந்திராது. அரசியல் லாபத்துக்காக அது எதிர்க்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.